



# பாவஅறிக்கையிலிருந்து ஆறுதலுக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 9; எரே 25:11,12; 29:10; 2இராஜா 19:15 -19; மத் 5:16; யாக் 5:16.*

**மனன வசனம்:** ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன். தானி **9:19.**

வேதாகமத்தின் அற்புதமான ஜெபங்களில் ஒன்று தானியேலில் உள்ளது. வாழ்க்கையில் சவால்கள் எழுந்தபோது, அவற்றை எதிர்கொள்ள தானியேல் ஜெபத்தில்தான் இறங்கினான். அஞ்ஞான ராஜா கண்ட ஒரு விநோதமான சொப்பனத்தால், தானியேலும் அவனுடைய நண்பர்களும் கொல்லப்படுகிற சூழ்நிலை வந்தபோது, தேவனிடம் சென்று அந்தத் தீர்க்கதரிசி ஜெபித்தான். தானி 2. ராஜாவைத் தவிர வேறு யாரையும் வணங்கக்கூடாதென ஒரு ராஜா கட்டளை போட்டபோது, தானியேல் வழக்கம்போல எருசலேமைநோக்கி ஜெபித்தான். தானி 6. தானி 8ல் உள்ள 2300 இராப்பகல் பற்றிய தரிசனமானது தானியேலுக்குள் மிகுந்த தாக்கத்தை உண்டாக்கியிருக்கவேண்டும்; அந்தப் பின்னணியில்தான் தானி 9லுள்ள ஜெபத்தைச் செய்திருப்பான். தீர்க்கதரிசனம் குறித்த முழுவிபரமும் சொல்லப்பட்டாலும், அதன் காலக்கட்டம்பற்றி இரண்டு தூதர்களும் பேசிக்கொண்டது தானியேலுக்குப் புரியவில்லை. 'இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும்.' தானி 8:14. 9ம் அதிகாரத்தில்தான் அதுபற்றி அதிக வெளிச்சம் தீர்க்கதரிசிக்குக் கொடுக்கப்படுகிறது; ஆனால் இந்தமுறையும் அவன் ஊக்கமாக ஜெபித்துத்தான் அந்த வெளிச்சத்தைப் பெறுகிறான்.

*2020, மார்ச் 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# இன்றியமையாத வேதாகமம்

**கேள்வி: தான் கவனமாக ஆராய்ந்து வந்த தீர்க்கதரிசனத்தை 'புஸ்தகங்களால்' அறிந்து கொண்டதாக தானியேல் சொல்கிறான். வேதாகமத்தின் எந்தப் புத்தகத்தை அல்லது புத்தகங்களை அவன் குறிப்பிட்டிருக்கலாம்?**

---

மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் தேவன் முன்பு வெளிப்படுத்தியிருந்தவற்றை தானியேல் ஆழமாக ஆராய்ந்திருக்க வேண்டும் என்பது அவனுடைய ஜெபத்தில் தெரிகிறது. சிறையிருப்பின் காலம் 70 வருடங்கள் நீடிக்குமென எரேமியாவின் புத்தகச்சுருளிலிருந்து அறிந்து (எரே 25:11,12; 29:10), வரலாற்றின் ஒரு முக்கியக்கட்டத்தில் தான் இருந்ததைப் புரிந்துகொள்கிறான்.

பாபிலோனை பெர்சிய சாம்ராஜ்யம் வீழ்த்துகிற கி.மு. 539ம் வருடத்தில் தானியேல் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறான். எனவே நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்து, தேவாயலத்தை அழித்து கிட்டத்தட்ட 70 வருடங்கள் கடந்திருந்தன. எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின்படி தேவமக்கள் சீக்கிரமே தங்கள் தேசத்திற்கு திரும்பயிருந்தார்கள்; எனவே தேவன் தம் வசனத்தில் வாக்குரைப்பதுபோல, தன் மக்களுக்கு முக்கியமான ஒரு நிகழ்வு சம்பவித்து, பாபிலோனின் சிறையிருப்பு முடிந்து, யூதர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்புவார்களென அறிந்தான்.

அப்போதிருந்த வேதாகமப் புஸ்தகங்களிலிருந்து, தன் மக்களுடைய பாவங்கள் எவ்வளவு கொடுமையானவை என்றும் தானியேல் அறிந்தான். அவர்கள் உடன்படிக்கையை மீறியிருந்தார்கள். தேவனோடு தங்கள் உறவை முறித்திருந்தார்கள்; அதன் விளைவாக நாடு கடத்தப்பட்டார்கள். லேவி 26:14-45. காலங்களை அறிந்துகொள்ளவும், அவசரம் உணர்ந்து தன் மக்களுக்காக தேவனிடம் மன்றாடவும் தேவ வெளிப்பாட்டின் ஆராய்ச்சி தானியேலுக்கு உதவியது.

பூலோக வரலாற்றின் இறுதி நாட்கள் நெருங்குவதால், முன்பைவிட அதிகமாக வேதவசனத்தை ஆராய்ந்து, அதன்படி வாழவேண்டியது அவசியமாக இருக்கிறது. நாம் வாழ்கிற உலகம்பற்றி அதிகாரப்பூர்வமான விளக்கத்தை வேதாகமம்மட்டுமே தரமுடியும். வேதாகமம் நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான போராட்டத்தின் வரலாற்றைச் சொல்கிறது; தீமை இறுதியில் அழிக்கப்பட்டு, தேவனுடைய நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதோடு மனித வரலாறு முடியும் என்பதைச் சொல்கிறது. எவ்வளவுக்கு வேதாகமத்தை ஆராய்கிறோமோ அவ்வளவுக்கு உலகத்தின் இன்றைய சூழலையும், அதில் நம்முடைய நிலையையும் புரிந்துகொள்ளலாம்; இந்த உலகத்தால் நம்பிக்கை எதையும் தரமுடியாத நிலையில், நாம் நம்பிக்கையோடிருப்பதற்கான காரணங்களைப் புரிந்துகொள்ளலாம்.

எந்த அர்த்தமும் இல்லாததுபோலத் தோன்றுகிற இந்த உலகத்தைப் பற்றி ஓரளவுக்குப் புரிந்துகொள்ள வேதாகமம் எவ்வாறு உதவியாக இருக்கிறது?

# கிருபை வேண்டி கெஞ்சுதல்

**கேள்வி: தானியேல் எதன் அடிப்படையில் கிருபைவேண்டி ஜெபிக்கிறான்? தானி 9:3-19.**

இந்த ஜெபத்தில் ஒரு சில கருத்துகளைக் கவனிக்கவேண்டும்.

முதலாவது, யூதமக்களுக்கு உண்டான அழிவுகளுக்கு எந்த வித மான விளக்கத்தையும் ஜெபத்தில் தானியேல் கேட்கவில்லை. காரணம் அவனுக்குத் தெரியும். காரணம் என்னவென்று தானியேல் சொல்வது தான் அந்த ஜெபத்தில் அதிகம் இடம்பெற்றுள்ளது. 'அவர் தீர்க்கதரிசி களாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு எங்களுக்கு முன்பாக வைத்த அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்.' தானி 9:9. 2300 இராப்பகல்பற்றின தரிசனத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் தானியேல் தவித்ததாகப் பார்த்தோம். தானி 8:27.

இரண்டாவது, தேவனுடைய கிருபையையும், அவருடைய மக்கள் தீமையும் பாவமும் செய்திருந்தாலும் தேவன் அவர்களை மன்னிக்க சித்தங்கொள்ள வேண்டுமென்று இந்த ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. ஒருபுறம், சுவிசேஷத்தின் பலத்த எடுத்துக்காட்டாக இந்த ஜெபம் இருக்கிறது. அதாவது, தங்களில் புண்ணியம் எதையும் பெற்றிராத மக்கள் தாங்கள் பெறத் தகுதியற்ற கிருபையை வேண்டுகிறார்கள்; தாங்கள் சம்பாதித்துப் பெறாத மன்னிப்பை வேண்டுகிறார்கள். தேவனுக்கு முன் நாம் ஒவ்வொருவரும் இருக்கிற நிலையை இது எடுத்துக் காட்டவில்லையா?

**கேள்வி: வேறு என்ன காரணங்களுக்காக தேவன் தன் ஜெபத்திற்குப் பதிலளிக்க வேண்டுமென்று தானியேல் சொல்கிறான்? தானி 9:18,19.**

தானியேலுடைய ஜெபத்தின் இன்னோர் அம்சமும் குறிப்பிடத் தக்கது. அதாவது, தேவனுடைய நாமத்தின் கனத்தின்நிமித்தம் செவி கொடுக்கும்படி கேட்கிறான். தன் வசதிக்கோ, தன் மக்களின் வசதிக்கோ தானியேல் ஜெபிக்கவில்லை; தேவனுடைய நிமித்தமாக ஜெபிக்கிறான். தானி 9:17-19. அதாவது, தேவனுடைய நாமம் கனப்படுத்தப் படும்படி வேண்டுகோளுக்குச் செவிகொடுக்குமாறு கேட்கிறான்.

2இராஜா 19:15–19ல் எசேக்கியேல் ஏறெடுக்கிற ஜெபம் எவ்வாறு தானியேலின் ஜெபம் போலவே உள்ளது? நாமும் தேவனை எவ்வாறு மகிமைப்படுத்தலாமென மத்தேயு 5:16 சொல்கிறது?

# பரிந்துபேசுதலின் முக்கியத்துவம்

**கேள்வி: தானி 9:5-13ஐ வாசியுங்கள். தேசத்திற்கு அழிவைக் கொண்டு வந்த பாவங்களில் தன்னையும் சேர்த்துக்கொண்டு, 'நாங்கள்' பாவம்செய்தோம் என்று தானியேல் மீண்டும்மீண்டும் சொல்கிறான். இதிலுள்ள முக்கியத்துவம் என்ன?**

---

வேதாகமத்தில் உள்ள முக்கியமான பரிந்துபேசுதலின் ஜெபங்களில் தானியேலின் இந்த ஜெபமும் ஒன்று. இத்தகைய ஜெபங்கள் தேவனுடைய இருதயத்தைத் தொடுகின்றன; நியாயத்தீர்ப்பை நிறுத்துகின்றன; எதிரிகளிடமிருந்து விடுதலையைத் தருகின்றன. யூத தேசம் முழுவதையும் அழிக்க தேவன் ஆயத்தமானபோது, மோசேயின் பரிந்துபேசுதலால் தேவன் தம் கரத்தை விலக்கினார். யாத் 32:7-14; எண் 14:10-25. கடுமையான பஞ்சத்தால் தேசம் அழியக்கூடிய நிலையில் இருந்தபோது, எலியாவின் ஜெபத்திற்கு தேவன் செவிகொடுத்து, தேசத்தில் விளைச்சல் உண்டாக மழையைக் கொடுத்தார். 1இராஜா 18.

குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள், பிற மக்கள், சூழ்நிலைகளுக்காக நாம் ஜெபிக்கும்போது, தேவன் நம் ஜெபங்களைக் கேட்டு, தலையிடுகிறார். சிலசமயங்களில் ஜெபத்திற்குப் பதிலளிக்க காலதாமதமாகலாம்; ஆனால், தேவன் தம் பிள்ளைகளுடைய தேவைகளை ஒருபோதும் மறப்பதில்லை.

தேவனுக்கும் மக்களுக்கும் இடையே பரிந்துபேசுபவராக அல்லது மத்தியஸ்தராக தானியேல் இங்குச் செயல்படுகிறான். மக்கள் தேவனுடைய கட்டளைகளை மீறி, தேவனுடைய எச்சரிப்புகளுக்குச் செவிகொடுக்க மறுத்து, பயங்கர பாவத்திற்குள்ளானதை வேத ஆராய்ச்சியிலிருந்து கண்டுகொள்கிறான். எவ்வளவு மோசமான ஆவிக்குரிய நிலையில் இருக்கிறோமென்பது புரிகிறது. எனவே குணமாகுதலுக்காகவும் மன்னிப்புக்காகவும் ஜெபிக்கிறான். ஆனால் மக்களோடு தன்னையும் சேர்க்க தீர்க்கதரிசி மறக்கவில்லை. ஒரு சில விதங்களில் கிறிஸ்துவின் பரிந்துபேசுதலைப் போலவே தானியேலின் பரிந்துபேசுதலும் உள்ளது. யோவான் 17. ஒரே ஒரு முக்கிய வித்தியாசம்தான். அதாவது, கிறிஸ்து 'பாவமில்லாதவர்.' எபி 7:26,27. எனவே அவர் பாவஅறிக்கை செய்யவேண்டியதில்லை; தம் மன்னிப்புக்காக பலிகள் செலுத்தவேண்டியதில்லை. எபி 7:26,27. ஆனாலும் பாவிகளோடு விசேஷித்த விதத்தில் அவர் தம்மைத் தொடர்புபடுத்துகிறார்: 'நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.' 2கொரி 5:21.

---

'மனிதனிலுள்ள அனைத்து நன்மையையும் பரிசுத்தத்தையும் நேர்மையையும் நேர்த்தியையும் ஒன்றுசேர்த்து, இரட்சிப்பில் அவற்றுக்குச் சம்பந்தமிருப்பதாக தேவ தூதர்களின் முன்னிலையில் சமர்ப்பித்தால், அந்தக் கோரிக்கையானது நயவஞ்சகம் என்று தள்ளுபடி செய்யப்படும்.' – *FW,* பக். 24. நமக்காகப் பரிந்துபேச ஒருவர் தேவையென்பதை இந்த வார்த்தைகள் எவ்வாறு நமக்குத் தெரியப்படுத்துகின்றன?

# மேசியாவின் ஊழியம்

பரிந்துபேசி ஜெபிக்கும்போது, இரண்டு முக்கிய விஷயங்களை தானியேல் சொல்கிறான். ஒன்று மக்களுடைய பாவங்கள், அடுத்தது எருசலேமின் அழிவு. இந்த இரண்டு விண்ணப்பங்களுக்கும் தேவன் பதிலளிக்கிறார். மேசியாவின் ஊழியத்தால் மக்கள் மீட்கப்படுவார்கள்; பரிசுத்த ஸ்தலம் அபிஷேகிக்கப்படும். வரலாற்றில் தானியேலின் காலத்தையும் தாண்டி, பரவலான விதத்தில் அந்த இரண்டு விண்ணப்பங்களுக்கும் பதில்கொடுக்கப்பட்டன. அதாவது மேசியாவின் ஊழியத்தால் மனித இனம் முழுவதும் பயனடையவிருந்தது.

**கேள்வி: 70-வாரக் காலத்திற்குள் என்ன வேலை செய்யப்படவேண்டியிருந்தது? தானி 9:21-27. ஏன் இயேசுமட்டுமே அதைச் செயயமுடியும்?**

1 **'மீறுதலைத் தவிர்க்கிறதற்கு.'** 'மீறுதல்' என்பதற்கான எபிரெய வார்த்தை பெஷா. மேலதிகாரிக்குகீழுள்ள ஒருவர் வேண்டுமெனகீழ்ப்படியாமல் போவதை இந்த வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. உதாரணமாக, நீதி 28:24. தேவனுக்கு எதிராக மக்கள் வெளிப்படையாகக் கலகத்தில் ஈடுபவதையும் சுட்டிக்காட்டுகிறது. எபே 2:3. இயேசுவின் இரத்தத்தால் தேவனுக்கு எதிரான கலகம் முறியடிக்கப்பட்டது; கல்வாரியின் புண்ணியங்கள் மனிதர்களுக்கு அருளப்பட்டன.

2 **'பாவங்களைத் தொலைக்கிறதற்கு.'** 'தொலைத்தல்' என்பது 'முத்திரையிடுதல்' என்கிற அர்த்தத்தில் பயன்பட்டுள்ளது. பாவம் மன் னிக்கப்பட்டதை இது சுட்டிக்காட்டுகிறது. விழுகைக்குப்பிறகு, தேவனுடைய தரநிலைகளுக்கு ஏற்ப வாழ்வது மனிதர்களுக்கு இயலாமல் போனது. ஆனால் நம் தோல்விகளை மேசியா பார்த்துக்கொள்வார்.

3 **'அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கு.'** 'அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.' கொலோ 1:19,20. இயேசுமட்டுமே இதை நிஜமாக்கமுடியும்.

4 **'நித்திய நீதியை வருவிக்கிறதற்கு.'** நமக்காக கிறிஸ்து சிலுவை யில் மரித்து, தேவனுக்குமுன் நாம் 'நீதிமான்களாக' எண்ணப்பட வழிசெய்திருக்கிறார். தேவனிடமிருந்து வரும் இந்த இரட்சிப்பை விசுவாசத்தால் மட்டுமே நாம் சொந்தமாக்கமுடியும்.

5 **'தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கு.'** கிறிஸ்து தம்மையே பலியாகக் கொடுத்தபோது, அவருடைய பாவ நிவாரண ஊழியத்தைச் சுட்டிக்காட்டின பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் முத்திரிக்கப்பட்டன; அதாவது நிறைவேறின.

6 **'மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுவதற்கு.'** மகா பரிசுத்தமுள்ளது என்பது ஒரு நபர் அல்ல, ஓர் இடம். எனவே, கிறிஸ்து நம் பிரதான ஆசாரியனாக தம் ஊழியத்தை ஆரம்பித்திருக்கிற பரலோக ஆசரிப்புக் கூடாரத்தை அபிஷேகம்பண்ணுவதை இது காட்டுகிறது. எபி 8:1.

# தீர்க்கதரிசனக் காலண்டர்

2300 இராப்பகல் தரிசனத்தைக் கண்ட தானியேல், அதன் அர்த்தம் புரியாமல் திகைக்கிறான். தானி 8:27. பத்து வருடங்களுக்கு பிறகு அந்தத் தரிசனத்தை தானியேலுக்கு 'அறிவிக்க' காபிரியேல் வருகிறான். தானி 9:23. முன்பு தெரிவிக்கப்படாத தகவல்களைத் தெரிவித்து, 70 வாரக் காலத்தின் இறுதியில் மேசியாவின் பணி நிறைவடையும் என்று தெரிவிக்கிறான். வருடம்-நாள் நியதியின்படி, 70 வாரம் என்றால் 490 வருடங்கள். எருசலேமைத் திரும்பக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படும்போது, இந்தக் காலக்கட்டம் ஆரம்பிக்கிறது. தானி 9:25. கி.மு. 457ல் அர்தசஷ்டா ராஜா இந்தக் கட்டளையைப் போட்டான். எஸ்றாவின்கீழ் எருசலேமைத் திரும்பக் கட்டுவதற்கு யூதர்களுக்கு அனுமதி கிடைத்தது. எஸ்றா 7. 70 வாரங்கள் 'வெட்டப்பட்டுள்ளது'. நீண்ட ஒரு காலக்கட்டத்தில் இருந்துதான் 490 வருடங்களை வெட்ட முடியும். எனவே, அதிகாரம் 8இல் வரும் 2300 வருடங்கள்தாம் அந்த நீண்ட காலக் கட்டம். எனவே, 490 வருடங்களும் 2300 வருடங்களும் ஆரம்பிப்பது ஒரே காலக்கட்டமாகத்தான் இருந்தாகவேண்டும்.

70 வார தீர்க்கதரிசனத்தில் மூன்று பகுதிகள் உள்ளன: ஏழு வாரங்கள், 62 வாரங்கள், எழுதபதாவது வாரம். ஏழு வாரங்கள் என்பது எருசலேம் திரும்பக் கட்டப்படுகிற 49 வருடங்கள். அந்த ஏழு வாரங்களுக்கு பிறகு 62 வாரங்கள் என்பது 434 வருடங்கள். அதன்பிறகு 'பிரபுவாகிய மேசியா' வருகிறார். தானி 9:25. எனவே அர்தசஷ்டா கட்டளையிட்டு 483 வருடங்களுக்கு பிறகு, கி.பி. 27ல் மேசியா ஞானஸ்நானம் பெற்று, மேசிய ஊழியத்திற்காக பரிசுத்த ஆவியால் அபிஷேக்கப்படுகிறார். எழுபதாவது வாரத்தில், வேறு முக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன:

1 'மேசியா **சங்கரிக்கப்படுவார்**.' தானி 9:26. கிறிஸ்துவின் மரணம்.

2 மேசியா 'ஒரு வாரமளவும் அநேகருக்கு **உடன்படிக்கையை உறுதிப்படுத்துவார்**.' தானி 9:27. யூத தேசத்திற்கு இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்த விசேஷித்த ஊழியம். கடைசி 'வாரமான' கி.பி. 27-34.

3 'அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்.' தானி 9:27. இயேசு ஞானஸ்நானம் பெற்று மூன்றரை வருடங்களுக்குப்பிறகு (அதாவது, வாரத்தின் மத்தியில்) பலிமுறையை நீக்கிப்போட்டார். புதிய உடன்படிக்கையின் பூரண பலியாக அவர் தம்மையே பலியாக்கியதால் அந்தப் பலி முறைகள் தீர்க்கதரிசன முக்கியத்தவத்தை இழந்தன; அதன்பிறகு பலிகள் தேவையாயிருக்கவில்லை. 70 வாரத் தீர்க்கதரிசனத்தின் கடைசி வாரம் கி.பி. 34 இல் முடிகிறது; அப்போது ஸ்தேவான் இரத்தசாட்சியாக மரித்தார்; நற்செய்தி புறஜாதியாருக்கும் கொண்டுசெல்லப்பட்டது.

தானி **9:24–27**ல் மேசியா குறித்து மிகுந்த நம்பிக்கையும் வாக்குறுதியும் கொடுக்கப்பட்டாலும் வன்முறை, போர், அழிவு பற்றிதான் அதிகமாக வாசிக்கிறோம். வாழ்க்கையின் பேரழிவுகளுக்கு மத்தியிலும் நம்பிக்கையிருப்பதை உணர இது எவ்வாறு உதவுகிறது?

## மேலும் படிக்க:

தானி 9:24–27ன் 70 வாரத் தீர்க்கதரிசனத்திற்கும் தானி 8:14ன் 2300 இராப் பகல் தீர்க்கதரிசனத்திற்கும் உள்ள தொடர்பை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது. இரண்டும் ஆரம்பிக்கிற காலம் ஒன்றுதான். கி.மு. 457 லிருந்து 2300 வருடங்களைக் கணக்கிட்டால் (பூஜ்ய வருடத்தைக் கழிக்கவேண்டும்) 1844 வருகிறது. அல்லது, கி.பி. 34 லிருந்து மீதமுள்ள 1810 வருடங்களை (2300–490 = 1810) கணக்கிட்டால், 1844 தான் வருகிறது. எனவே, தானி 8:14ல் சொல்லப்படும் பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பானது 1844ல் ஆரம்பிக்கிறது.

தானி 7, தானி 8இன் ஆராய்ச்சியை வைத்துப் பார்த்தாலும் 1844வது வருடம் கிடைக்கும். அதாவது, தானி 7இன் நியாயவிசாரணையும், தானி 8இன் பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பும் ஒன்றுதான். (கடந்த இரண்டு வாரப் பாடங்களைப் பாருங்கள்.) 1260 வருட உபத்திரவத்திற்குப்பிறகு, அதாவது இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் அவருடைய நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும் முன்னால் இது நிகழ்கிறது.

**2,300 இராப்பகல்** (2,300 வருடங்கள்) **2300 = 490+1810**




### கலந்துரையாடக் கேள்விகள்

1. *2300 இராப்பகல் தீர்க்கதரிசனமும் 70 வாரத் தீர்க்கதரிசனமும் ஒரே தரிசனம் தான் என்று வேத அறிஞர்கள் சொல்கிறார்கள். அது சரிதான். அவ்வாறு சொல்வதற்கு காரணம் என்ன? அதை நிரூபிப்பதற்கு என்னென்ன ஆதாரங்களை முன்வைக்கலாம்?*

2. *நாம் பரிந்துபேசி ஜெபிக்கிறவர்களாக மாறுவதற்கு தானியேலுடைய பரிந்து பேசுதலின் ஜெபத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?*

3. *கிறிஸ்து நமக்காக மரித்ததுதான் நமக்கிருக்கும் ஒரே நம்பிக்கை. இது எவ்வாறு தாழ்மையுடனும், அன்புடனும், பிறரை மன்னிக்கிற மனப்பான்மையுடனும் இருக்கச் செய்யவேண்டும்? லூக்கா 7:40-47 சொல்வது என்ன?*

4. *தானியேலின் ஜெபமும் நம்பிக்கையும் வேதாகமத்தைத்தான் மையமாகக் கொண்டிருந்தது. இஸ்ரவேல் தேசம் தோற்கடிக்கப்பட்டது, மக்கள் நாடுகடத் தப்பட்டார்கள், நிலம் பாழாக்கப்பட்டது, தலைநகரம் அழிக்கப்பட்டது. இவற்றிற்கு மத்தியிலும் மக்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்புவார்களென தானியேல் நம்பிக்கையோடிருந்தான். தேவனுடைய வாக்குறுதிகள் எழுதப் பட்டுள்ள வேதாகமத்திலிருந்து அல்லாமல் வேறு எங்கிருந்து அவர் அந்த நம்பிக்கையைப் பெற்றிருக்கமுடியும்? வேத வசனத்தின் வாக்குறுதிகளிலிருந்து நாமும் நம்பிக்கையைப் பெறலாமென இதிலிருந்து எவ்வாறு அறிந்துகொள்ள முடிகிறது?*